## மெட்ரோ ரெயில் நிலையங்களில் இருந்து இயக்கப்பட்ட

# ஷேர் ஆட்டோ, டாக்சியில் 4 லட்சம் பேர் பயணம்

சென்னை, செப்.9–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் கடந்த மாதம் முதல், தேர்ந்தெடுக்கப்பட்ட மெட்ரோ ரெயில் நிலையங்களில், மெட்ரோ ரெயிலில் பயணிக்கும் பயணிகளுக்காக பல போக்குவரத்து இணைப்பு நடவடிக்கைகளை வழங்குவதற்கான முயற்சியை மேற்கொண்டு வருகின்றது.

அந்தவகையில் 7 மெட்ரோ ரெயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ சேவை ரூ.5 கட்டணத்துடனும், ஷேர் டாக்சி சேவை ரூ.10 கட்டணத்துடனும் இயங்குகிறது. கடந்த ஒரு வருடத்தில், 4 லட்சத்து 86 ஆயிரத்து 205 பயணிகளும், கடந்த ஆகஸ்டு மாதத்தில் மட்டும் 41 ஆயிரத்து 131 பயணிகளும், ஷேர் ஆட்டோ, டாக்சி சேவையை பயன்படுத்தி உள்ளனர்.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், ஒரு தனியார் நிறுவனத்துடன் இணைந்து, கடந்த ஆகஸ்டு மாதம் 5–ந்தேதி முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட 6 மெட்ரோ ரெயில் நிலையங்களில், டாக்சி சேவையை ரூ.10 கட்டணத்தில் தொடங்கியுள்ளது. இந்த கட்டணத்தை ரெயில் பயண அட்டை மற்றும் செயலி மூலமாக் செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை இந்த சேவையை 4 ஆயிரத்து 987 பயணிகள் பயன்படுத்தி உள்ளனர். இந்த வசதியை விரைவில் அனைத்து மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் விரிவு படுத்தப்படுவதாக, மெட்ரோ ரெயில் நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.